# அளவெட்டி
# கும்பிழாவளைப் பிள்ளையார்
# தோத்திர வெண்பா மாலை



நூலாசிரியர்
வித்துவான் திரு. வே.ஆறுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கும்பழாவளைப் பிள்ளையார்
# தோத்திர வெண்பா மாலை



நூலாசிரியர்

வித்துவான் திரு. வே. ஆறுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் - அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் தோத்திர வெண்பா மாலை

நூலாசிரியர் - வித்துவான் திரு. வே. ஆறுப்பிள்ளை

உரிமை - குடும்பத்தினர்

வெளியீடு - குடும்பத்தினர்

அச்சுப்பதிப்பு - கரிகணன் (தனியார்) நிறுவனம்
681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

நூலின் அளவு - பனுவல்

பிரதிகள் - 500

பக்கங்கள் - 23

நூல் பெறும் இடம் - டச்சு வீதி, அளவெட்டி.
தொலைபேசி - 077 6183 200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அமரர் வே. ஆறுப்பிள்ளை அவர்களால் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் மீது பாடப்பட்ட பிரபந்தங்களின் தொகுப்பாக " கும்பழாவளை விநாயகர் தோத்திர வெண்பா மாலை" என்ற இந்நூல் வெளிவருகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் பயின்ற காலச் சூழலே திரு. வே. ஆறுப்பிள்ளை ஆசிரியர் அவர்களுக்கு கவிதை எழுதுவதற்கான உந்துதலைக் கொடுத்திருக்கக்கூடும்.

ஆசிரியருக்கு கற்பித்தற் பணியைவிடப் பல சமூகக் கடமைகளும் தொன்று தொட்டே இருந்து வருகின்றன. கட்டுரைகள், வாழ்த்துப்பாக்கள், அஞ்சலிப்பாக்கள், திருத்தலங்கள் மீதான பாடல்கள் என்பவற்றை எழுதுதல், அயற்சூழலிலுள்ள பிள்ளைகள் எதிர்கொள்ளும் போட்டிகளுக்கான கட்டுரைகள், கவிதை, பேச்சு, ஆக்கங்களைத் தாமே எழுதிக் கொடுத்தல் என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும்.

இவ்வகையில் ஆசிரியர் ஆறுப்பிள்ளை அவர்களும் மாணவருக்காக சிறிய கவிதைகளை எழுதிய பழக்கத்தின் பின்னணியிலேதான் கவிதைத் துறைக்குட் பிரவேசித்திருப்பார் என நான் கருதுகின்றேன். வாழ்த்துப்பாக்கள், அயலிலுள்ள ஆலயங்களுக்கான சிறிய பக்திசார் பாடல்கள், பாடல் பெற்ற தலங்களுக்கான உற்சவகாலப் பாடல்கள் என ஆரம்பித்த அவரது கவிதைப் பணி ஐம்பது பாடல்களைக் கொண்ட கும்பழாவளை விநாயகர் தோத்திர வெண்பா மாலையைப் பாடுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

தனது வழிபடு தெய்வமான கும்பழாவளை விநாயகர் மேல் அவர் பாடிய பாடல்களில் அவரது தனித்துவமான பக்திச் சிறப்பை மட்டுமன்றி, சங்கமருவிய காலத்தின் பிற்பகுதி தொடக்கம் ஊற்றெடுத்துப் பெருகிய பக்தி இலக்கிய, மரபின் செல்வாக்கையும் காண முடிகின்றது. இறைவனின் பல்வேறு திருநாமங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுதல், இதிகாச புராணக் கதைகளைச் சேர்த்துக் கொள்ளல், இறை தோற்றப் பொலிவை வர்ணித்தல் என்பவை பக்தி நெறிக்காலமான பல்லவர் காலத்தில் அதிகம் கையாளப்பட்ட உத்திகளாகும். இவற்றை ஆறுப்பிள்ளை ஆசிரியரின் பாடல்களிலும் அதிகம் காணலாம்.

இத்தோத்திர மாலையானது வெண்பா, விருத்தப்பா ஆகிய இருவகை யாப்புக்களிற் பாடப்பட்டுள்ளது. இவற்றுள் வெண்பா யாப்புக் கடினமான இலக்கணக் கட்டுப்பாடுகளைக் கொண்டதாகும். இதனால் 'வெண்பா புலவர்க்குப் புலி' என்று கூறுவார்கள். இந்த வகையில் ஆசிரியர் அவர்களும் 'வெண்பா மூலம் பக்திச்சுவையுடையதாய் உள்ளம் உருகச் செய்யும் பாடல்களை அமைத்தல் இலகுவானது அல்ல' என்று குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

"கோள்கள் பகைத்துக் கொடுந்துயரம் தந்தாலும்
நாளும் பொழுது முனை நான் மறவேன் - ஆளும்
அருள் சுரக்கும் ஐங்கரனே அமரர் தங் கோவே
மருணீக்கி ஆள்வாய் மகிழ்ந்து"

என்னும் பாடல் பெரும்பாலும் இலக்கணக் கட்டுக்கோப்பின்படி அமைந்து கவிஞரது தங்கு தடையற்ற கவியாற்றலை வெளிப்படுத்துவதாக உள்ளது.

புராணக் கதைகளையும் ஆங்காங்கே இணைத்து விநாயகரின் அருள்திறனை வெளிப்படுத்தும் பாங்கினைப் பல பாடல்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

" காக வடிவெடுத்து அகத்தியரின் கமண்டலத்தை வேகமாய்ச் சரிக்க நீர் காவிரியாய் மாறியதே" என்னும் பாடலடிகள் காக வடிவெடுத்த விநாயகர் அகத்தியரின் கமண்டலத்திலிருந்து காவிரியைப் பெருகச் செய்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றது.

கும்பழாவளைத் தலத்தின் பெருமையையும் கவிஞர் பல இடங்களிற் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

" கும்பழா வளையே குஞ்சரனார் உவக்குமிடம்
அம்பலத்தாடுகின்ற அரனாரும் விரும்புமிடம் - நம்பி நிதம்
வானவரும் வந்தே வணங்குமிடம் நள்ளிரவில்
கானமுறு கீதமுடன் தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அற்புதக் கேணியும் அருகே முருகனாலயமும்
பொற்புறுசிறார் பள்ளியும் அமுதளி மண்டபமும் - சொற்கொண்டு
இயம்பரிய சூழல்சார் கும்பழாவளையே
அயன் அரி வணங்கு தலம்"

என்னும் பாடல்களில் இவ் வெளிப்பாட்டைக் காணலாம். வெண்பாவை விட விருத்தப்பா அவருக்கு வாலாயமாக அமைந் திருக்கின்ற தன்மையை

"நெற்றியிலே வெண்ணீறு திகழ வேண்டும்
நெஞ்சினிலே உன் நாமம் ஒளிர வேண்டும்.
கற்றதெல்லாம் மறவாமல் வளர வேண்டும்
கவிதையிலே நின்புகழைப் பாட வேண்டும்
பற்றதெல்லாம் விட்டொழிந்து வாழ்தல் வேண்டும்
பழவினைகள் சூழாமல் காக்க வேண்டும்.
உற்ற பெரு கும்பழா வளைதனிலே
உறைபவனே விநாயகனே காத்தருள்வாய்"

என்னும் பாடல் இதனைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

எனவே கும்பழாவளைப் பிள்ளையார் மேல் தான் கொண்ட பக்தியை பல்வேறு யாப்புக்கள் மூலமும், உத்திகள் மூலமும், தங்குதடையற்ற கவிதை ஓட்டம் மூலமும் வெளிப்படுத்தும் சிறந்ததொரு பக்தி இலக்கியமாகக் கும்பழாவளை விநாயகர் தோத்திர வெண்பா மாலை விளங்குகின்றது எனலாம்.

**திரு. ம. பா. மகாலிங்கசிவம்**
B. A(Hons), M.A(Tamil), M,Ed


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழ்ப் புலமையும் கவிப்புலமையும் கொண்ட என் தந்தையார் திரு.வே.ஆறுப்பிள்ளை அவர்கள் தெய்வீகத்தின் மீதும், நாட்டு நடப்புகள் பற்றியும் 'அவ்வப்போது பல்வேறு கவிதைகளை அழகுற இயற்றியுள்ளார். அவரால் எழுதப்பட்ட பல கவிதைகள் கையெழுத்துப் பிரதிகளாகவே காணப்படுகின்றன.

போரினால் ஊர்விட்டு இடம்பெயர்ந்து சென்று, மீண்டும் சமாதானச் சூழலில் தந்தையாருடன் வீட்டைப் பார்வையிட வந்தபோது தான் அழகாகப் பேணிய வீடு இருந்த நிலைகண்டு அவர் அதிர்ச்சியடைந்து போய்விட்டார். இவ் வேளையில் வீட்டுநிலைபற்றி அவர்பாடிய பாடல் ஒன்று நினைவில் வருகிறது.

"கூரைகள் இல்லா வீடு
குனிந்துமே நிலத்தை நோக்கிச்
சீரையே இழந்து நின்ற
சிறுமையை என்னென்பேனோ?
ஆரையோ கொண்டு செய்த
அழகிய கதவு யன்னல்
யாரையும் அறியா வண்ணம்
ஓடியே மறைந்ததெங்கே?

வீட்டுக்காக மட்டும் அவர் கவலைப்படவில்லை தன் அழகிய ஊர் இருந்த நிலையும் அவர் மனதை வாட்டியது. அதனை

"கனிதரு மரங்களோடு
பயன்தரு பனைகள் தென்னை
நனி மிகுந்த திருவூரின்
தெருவெல்லாம் மண்மேடாகி
மனிதர்கள் யாரும் இன்றி
மனைகளின் சிதைவுத் தோற்றம்
இனியொரு வார்த்தை இல்லை
இவற்றினை இயம்புதற்கே".

என்னும் பாடலில் வெளிப்படுத்தினார். இவ்வாறு சூழ்நிலைக்கேற்ப பாடல்களைப் பாடக்கூடியவராக என் தந்தை விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மரணத்தின்பின் அவர் கையெழுத்துப் பிரதிகளாக வைத்திருந்த ஆக்கங்கள் பலவற்றையும் கண்டு கொண்டேன். அவற்றுள் கும்பழாவளைப் பிள்ளையார் தோத்திர வெண்பாமாலையும் ஒன்றாகும். அவர் இவ்வெண்பா மாலையை வெளியிட வேண்டும் என்ற விருப்பைத் தெரிவித்திருந்தபோதும் இந்நூலில் ஐம்பது பாடல்கள் இருந்தன என்பதை அவரின் இறப்பின் பின்னர்தான் கண்டு கொண்டேன்.

கும்பழாவளைப் பிள்ளையார் மீது தான் வெண்பா மாலையைப் பாடியதற்கான காரணத்தை "கும்பழாவளைப் பிள்ளையார் மீது பல தோத்திரப் பாடல்களைப் பாடிப் பலர் அருள் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களுடைய பாமாலைகள் எல்லாம் வெண்பாவில் அமையவில்லை. தேவாரம், திருவாசகம், திருவூஞ்சல், திருப்பள்ளி எழுச்சி போன்றன யாவும் விருத்தப்பாக்களிலேயே அமைந்துள்ளன. வெண்பா மூலம் பக்திச் சுவை உடையதாய் உள்ளம் உருகச் செய்யும் பாக்களை அமைத்தல் இலகுவானதன்று அடியேன் பிள்ளையார் மீது சில பாடல்களை வெண்பாவில் இயற்றிப் பாராயணம் செய்து வருகிறேன். சில பாடல்களைப் பாடி மகிழ விரும்பினேன். அதன் பயனே இம் மாலையாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலை அவரின் விருப்பப்படி அவர் வாழ்ந்த காலத்தில் வெளியிட முயற்சிக்காமை கவலை தருகின்றது. தந்தையார் நினைவாக அவர் இயற்றிய இந்நூலை விநாயகப் பெருமானின் திருப்பாதங்களில் தந்தையாருக்கு அருளும், ஆத்ம சாந்தியும் வேண்டிச் சமர்ப்பிக்கின்றேன். அத்துடன் அவர் இயற்றிய உலகியல் விடயங்கள் குறித்த சில தனிப்பாடல்களையும் அவரின் நினைவு மலரில் இணைத்து வெளியிடுகின்றேன்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்று வள்ளுவர் கூறியிருப்பதைப்போல், இந்நூலிலுள்ள நல்ல விடயங்களையும் ஏனைய விடயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து மிகையாக உள்ளவற்றைக் கொள்ள வேண்டியது கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

**ஆ. இளங்கோ**
**மகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளை விநாயகர் தோத்திர வெண்பா மாலை

### காப்பு

விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனாய் விளங்குகின்ற
கண்ணுதலுடைய நற்களிற்றின் மாமுகனே - எண்ணி நான்
வெண்பாமாலை பாடிநின் அருள்பெற்றிடவே
கண்பாராய் காலமெலாம் கனிந்து.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த அளவையிலே
சீர்பெருகு கும்பழாவளை மேவி - பார் புகழ
அருளாட்சி செய்கின்ற அண்ணலே என்றன்
மருணீக்கி ஆள்வாய் மகிழ்ந்து.

வேழமுகத்தோனே விநாயகனே வித்தகனே
சூழும் வினையறுத்துத் துயர் களைவாய் - நாளும்
என்மனதில் நீ உறைவாய் எப்போதும் நான் தொழுவேன்
பொன்னடிக்கே என்றுஞ் சரண்.

பாழும் பிறப்பெடுத்து பலதுயர்கள் நான் அடைந்து
நாளும் பொழுதும் நலிகின்றேன் - ஆழ் கடல் சூழ்
வையத்து மேலும் பிறப்பெடுத் தலையாமல்
உய்யும் வழி அருள்வாய் இனிது.

தும்பிக்கை யுடையானே துயர் தீர்க்கும் விநாயகனே
அம்பிகையின் பாலகனே அருள்தருவாய் - நம்பிநிதம்
உன்னையே வேண்டி உள்ளுருகும் அடியார்க்கு
இன்னருளை ஈந்திடுவாய் ஈங்கு.

தாயினும் நல்ல தயாளன் என்றுன்னையே
வாயினால் நெஞ்சார வாழ்த்துகிறேன் - தூய
நெஞ்சத்தில் நீவந்து நிலையாகக் குடிபுகுந்து
அஞ்சலென்றே அருள்வாய் இனி.

கண்கவரு மோவியங்கள் கலைமிளிரு சிற்பங்கள்
விண்பரவு கோபுரமும் தாமுடையாய் - எண்பரவு
அற்புதங்கள் பலசெய்தாய் அடியார்கள் நலமுறவே
தற்பரனே எனையாண்டு கொள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையிருந்து நின்பாதம் பூசை செயும்
இட்டமெனக்கேதும் இன்னுமில்லை - திட்டமுடன்
தண்ணார் திருவடிகள் தாழ்ந்து பணிவேனை
கண்பாராய் கணபதியே கனிந்து.

தந்தையும் தாயுமே உலகென்று வலம்வந்த
விந்தைதனை அறிவார் எவருண்டு - முந்தை வினை
முற்றாகவேரறுக்கும் முழுமுதலும் நீயன்றோ
வற்றாநின் பேரருளே காப்பு.

அறுகம்புல் கொண்டு ஆனைமுகவா நினைத் தொழுதால்
அருகும் வினைகள் தாம் என்பரே - பெருகும்
புத்தியுண்டாம் வித்தை யுண்டாம் பிணிகள் நீங்கும்
சத்தியுண்டாம் சித்தியுண்டாம் காண்.

ஆற்றங்கரையில் அரசமாமரத்தடியில்
போற்றும் புனித இடங்களிலே - வீற்றிருந்து
உள்ளம் உருகி உணர்விழந்து தொழுவோர்க்கு
வள்ளலாய் நீயருள்வாய் இனிது.

எள்ளுப் பொரியும் அவலப்பம் இளநீரும்
வெள்ளைப் பசும்பாலும் நான்தருவேன் - தெள்ளியநற்
செந்தமிழில் உனைப் பாடித்துதிக்கக் கணபதியே
மந்திரமாய் எனக்குள் வாழ்.

தொந்தி வயிறும் துதிக்கையுடன் முக்கண்ணும்
விந்துசேர் நாதமுமாய் விளங்குகின்றாய் - சந்ததமும்
உன்பாதந் தொழுது உளமுருகும் அடியார்க்கு
நின்னருளே மன்னுந் துணை.

தித்திக்கும் வெண்பாவால் தெய்வீக நின்னருளை
பத்தியுடன் நானெடுத்துப் பாடவே - நித்தம்
தந்திமுகத்துத் தயாபரனே நீ எனக்கு
புந்தி புகுந்து வழிகாட்டு வாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ் வினைகள் வேரறுக்கும் விநாயகனே வித்தகனே
அவ்வினையால் நான் அலைந்து வழுந்தாமல் - செவ்வையாய்
இன்னருளைப் பெற்றே உலகில் வாழ்ந்திடவே
நின்னருளை ஈந்திடுவாய் இனிது.

நின்திருப் பாதங்களை நித்தமும் தொழுவேனை
இன்னமும் எத்தனை காலம் வாழ்விப்பாய் - இன்னறுதேன்
பாலும் பழங்களுமே தந்துன்னை வழிபடுவேன்
சாலவுமே எனக்கருள் தா.

கோள்கள் பகைத்தும் கொடுந்துயரம் தந்தாலும்
நாளும் பொழுதுமுனை நான்மறவேன் - ஆளும்
அருள் சுரக்கும் ஐங்கரனே அமரர் தங்கோவே
மருணீக்கி ஆள்வாய் மகிழ்ந்து.

இணையிலாப் பெரும்பக்தன் என்மாமன் தாமுவுமே
கணபதிக்கே தொண்டுசெய்து தாம் வாழ்ந்தார் - உணர்வுடனே
பூமாலை புனைந்தேத்தி புராணங்கள் தாம்பாடி
கோமானாய் வாழ்ந்தார் மகிழ்ந்து.

தள்ளாத வயதிலும் தளராத உடல்வளமும்
துள்ளும் மனவழகும் நானுடையேன் - எள்ளாது
அஞ்சாத வாழ்வு தந்து அரும்சுகத்தைக் காப்பாற்றி
குஞ்சரனே எனக்கருள் தா

உன்னைத் தொழுதடியார் யாவையுமே பெற்றுயர்ந்தார்
முன்னைப் பழவினைகள் முற்றாக அழிந்திடவே - அன்னவர் போல்
என்னையு மடியனாக்கி இருவினை நீக்கியே
அன்னை போல் காப்பீர் இனிது.

சொற்பஞ்சம் ஏதுமின்றி நல்வெண்பாப் பாடவே
நற்குஞ்சரனே நண்ணு மிடர் தீர்ப்பாயே - வெற்பில்
பாரதம் வரைந்து பாரெங்கும் நிலைத்திடவே
காரணனாய் நின்றாய் மகிழ்ந்து.

முன் செய் வினைகள் முற்றாக ஒழிந்திடாது
என்னை இன்னும் வருத்துவதை நானுணர்வேன் - மன்னும்
தீயிற் பஞ்சுபோல் செம்மையாய்த் தீர்ந்திடவே
நாயினேற் கருள்வாய் இரங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுத்து நோய் மிகவே துதிக்கையால் தூக்கியெனை
அன்புடனே ஆதரித்துகைலாயம் சேர்த்திடுவாய் - என்றுமே
உனை மறந் தறியேன் ஔவைபோல் தொழுதிடுவேன்
நின்னருளே நித்தம் துணை.

கும்பழாவளையுறையும் குஞ்சரனே விநாயகனே
நம்பி வழிபடுவோர்க்கருள்புரியும் நாதனே - தும்பிமுகத்
தூயவனே யெனை யென்றும் நொந்து வருந்தாமல்
தாயெனவே காப்பாய் இரங்கி.

இசைவல்ல அந்தணர்கள் ஓதுகின்ற மந்திரங்கள்
திசைதொறும்தேவர்களைக் கவருமே - இசைநுட்ப
இசைபயிற்றும் ஆசிரியர் இனியகுரல் கேட்டுமே
அசைவின்றி நிற்குமே ஆடுமயில்.

முந்தை வினையெல்லாம் முற்றாக வேரறுத்து
தந்தி முகத்தோனே நான் உய்ய வழிசெய்வாய் - சிந்தையிலே
வெண்பாக்கள் தோன்றி சுவையாகப் பாடிடவே
கண்பாராய் கணபதியே கனிந்து

ஊழ்வினை வந்துறுத்த உடல்நோய் அணுகாமல்
வாழ்வினை வளஞ் செய்வாய் வாரணனே - சூழும்
துன்பங்கள் பானுமுன் பனியென ஒழிந்திடவே
இன்பத்தில் மூழ்கவருள் தா

உன்னைத் தொழுது நினைந்துருகும் அடியார்க்கு
மின்னலெனத் துயரங்கள் போக்கிடுவாய் - அன்னையாம்
ஔவைக்கு அருள்புரிந்த அருட்சுடரே ஐங்கரனே
செவ்வையாய் எனக்கும் அருள் தா.

காக வடிவெடுத்து அகத்தியரின் கமண்டலத்தை
வேகமாய்ச் சரிக்க நீர் காவிரியாய் மாறியதே - சோகமுடன்
வாழ்ந்த மக்களுமே சொர்க்கநிலை தாமடைந்தார்
ஆழ்ந்த இன்பத்தில் இனிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பழாவளையுறையும் குஞ்சரத்தின் அருள் பெறவே
நம்பி இறைஞ்சுவேன் துணிந்து.

நாளும் தவறாது நல்லடியார் தொண்டு செய்யும்
வேழமுகன் தலமே கும்பளாவளை என்பர் - வாழும்
புகழ் பூத்த இசைவல்லார் இசைபரப்பும் தலமெனவே
மகிழ்வுடனே இயம் பிடுவர் காண்.

நெற்றிக்கண் சிவனாரும் முப்புரத்தைத் தாமழித்தார்
நெற்றிக்கண் பெற்றும் அதனால் என்செய்தாய் - வெற்றியுடன்
முன்னைப் பழவினைகள் முற்றாக எரிசெய்தே
மன்னும் நின்னருளைத் தா.

மாருதப்புரவீக வல்லிதரு தலமேழின் நடுவனாய்
கார்தொடு கோபுரம் கொள் கும்பழாவளையே - சீர்மிகுந்த
பூசைகள் அபிடேகங்கள் புனித தினங்களிலே
நேசமுடன் நிகழும் தலம்.

மனிதப் பிறப்பெடுத்து மண்ணில் வாழுங்கால்
இனிய அருட்பிள்ளையார் திருவடிகள் - புனிதமுறு
தேன் சிந்து மலர் கொண்டு தினமும் வழிபட்டால்
மேன்மையுறு வாழ் வுண்டு காண்.

வள்ளி திருமணத்தைத் தந்திரமாய் நிறைவேற்ற
உள்ளத்தில் பிரார்த்தித்தான் முருகனுமே - வள்ளலாய்
வாரண உருவெடுத்து விநாயகனும் உதவுதற்குக்
காரணனாய் நின்றான் காண்.

உன்னை நிதம் தொழுவார் நினைத்தவற்றைத் தாம் பெறுவார்
மன்னும் அருட்கடலில் மூழ்கிடுவார் - மின்னும்
பொற்பாதம் போற்றிப் புதுமலரால் அர்ச்சித்தால்
நற்பதங்கள் அடைவார் விரைந்து.

அடியவர்தம் அகத்திலே அகலாது வீற்றிருந்து
கொடிய வினை தீர்த்தருளும் குஞ்சரனே - படி முறையில்
பக்குவ நிலையறிந்து பாரினிலே வாழவைத்தாய்
நெக்குருகித் தொழுதிடுவேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வு எது என்று நானறிய முன்னரே
இல்வாழ்வு தந்தென்னை இயங்கு வித்தாய் - பொல்லாத
துயரங்கள் துன்பங்கள் நோய்கள் வந்திடவே
அயராது களைந்தாய் நனி.

முக்கண்ணொடு மூஷிக வாகனம் இவர்ந்தே
திக்குத் திசைதொறும் அருள் பாலிக்கும் - சொக்கன்தன்
அன்பினால் அவதரித்த ஆனைமுகனே அருள்வாரியே
என்புருகித் தொழுதிட அருள்தா.

முந்தை வினைகளெல்லாம் முற்றாக வேரறுத்து
தந்தி முகத்தோனே நானுய்ய வழிசெய்வாய் - சந்தமுறு
வெண்பாக்கள் தோன்றி உன்னருளைப் பாடவே
கண்பாராய் என்றுமே கனிந்து.

பிள்ளையாரே பிள்ளையாரே துயர்களைவாய் என இரங்கி
கள்ள மில்லா நெஞ்சடியார் கதறி அழும்போது - அள்ளி அருள்
பாலிக்கும் ஐங்கரனே அருட்கடலே அடியார்க்கு
ஆலித்தருள்வாய் இனிது.

எந்தச் சுப அசுப காரியமும் இனிதாக நிறைவேற
தந்தம் ஒன்றுடைய தந்திமுகன் அருள் வேண்டின் - சந்ததமும்
இடரின்றிக் குறைவின்றி குற்றங்கள் ஏதுமின்றி
உடன்பாடாய் நிறைவேறும் காண்.

முந்தைவினை அறுக்கும் மூஷிக வாகனனே
சிந்தை மகிழ வைக்கும் சிறப்பான வாழ்வளிப்பாய் - அந்தமில்
ஆற்றல்கள் பல அளித்து அடியாரை உய்விப்பாய்
போற்றும் நின்னடிக்கே சரண்

மனிதப் பிறவி எடுத்த எவருமே இவ்வையகத்தில்
புனித நெறிநின்று கஜமுகனை வழிபட்டால் - நனிமிகுந்த
சுக வாழ்வு பெற்றுத் துயரங்கள் ஏதுமின்றி
அகமகிழ்ந்து வாழ்வர் இனிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதான காலத்தில் வரும் துன்பம் பலநூறாம்
அயராத உடல் நலமும் உள வளமும் உறுதி செய்தே - தயவுடனே
வல்லபை நாயகனே வருமிடர்கள் நீக்கியே
நல்லருள் நல்குவாய் இரங்கி.

அற்புதக் கேணியும் அருகே முருகனாலயமும்
பொற்புறு சிறார்பள்ளியும் அமுதளிமண்டபமும் - சொற் கொண்டு
இயம்பரிய சூழல்சார் கும்பழா வளையே
அயன் அரி வணங்கு தலம்.

கும்பழா வளையே குஞ்சரனார் உவக்குமிடம்
அம்பலத்தாடுகின்ற அரனாரும் விரும்புமிடம் - நம்பிநிதம்
வானவரும் வந்தே வணங்குமிடம் நள்ளிரவில்
கானமுறு கீதமுடன் தான்.

எத்தனை பிறவிகள் ஏழையேன் எடுத்திடினும்
அத்தனை பிறவியிலும் நான் மறவேன் - வித்தகனே
நின் திருவடிகள் நினைவில் நின்றகலாமல்
நின்றிடவே அருள்வீர் இரங்கி.

கற்றைச் சடைமுடியான் காவினிலே பெற்றெடுத்த
நெற்றிக்கண் கொண்ட கணபதியே - பற்றிநிற்கும்
பாவங்கள் போக்கிடுவான் பல இன்பம் நல்கிடுவான்
யாவர்க்கும் அருள்புரிவான் காண்

கல்வி கதித் தோங்கும் செல்வம் செழித்தோங்கும் கவலைதரு
அல்லல்கள் அனைத்தும் அகன்றிடுமே - இவ்வுலகில்
தேன்சிந்து மலர்கொண்டு கணபதியை வழிபட்டால்
ஆன்மீக வாழ்வுடையோர் தமக்கு.

தோப்புக் கரணமிட்டு வீழ்ந்து வணங்குவோர்க்கு
காப்புண்டாம் கணபதிதுணை நிச்சயமே - ஆப்பிழுத்த
குரங்குபோல் அலையாமல் ஐங்கரனின் பாதங்களை
சரண் எனக் கொள்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம்

ஐங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
ஆகமத்தின் பொருளானே போற்றி போற்றி
வெங்கொடுமை வினை அறுப்பாய் போற்றி போற்றி
வெற்றியருள் விநாயகனே போற்றி போற்றி
சங்கரன்தேர் அச்சிறுத்தாய் போற்றி போற்றி
சகலவற்றின் முன்னிற்பாய் போற்றி போற்றி
எங்குமுளாய் ஏரம்பா போற்றி போற்றி
எழிற்கும்பழா வளையுறை வாய் போற்றி போற்றி.

## வேறு

நெற்றியிலே வெண்ணீறு திகழவேண்டும்
நெஞ்சினிலே உன்நாமம் ஒளிரவேண்டும்
கற்றதெல்லாம் மறவாமல் வளரவேண்டும்
கவிதையிலே நின்புகழைப் பாடவேண்டும்
பற்றதெல்லாம் விட்டொழிந்து வாழவேண்டும்
பழவினைகள் சூழாமல் காக்க வேண்டும்
உற்றபெரு கும்பழா வளைதனிலே
உறைபவனே விநாயகனே காத்தருள்வாய்.

பிரணவத்தின் பொருளாகி நிற்பவனே
பிள்ளையார் எனும் பெயரைக் கொண்டவனே
சரவணவத்து முருகனுக்கு மூத்தவனே
சதாசிவன்தன் பாலகனாய் வந்தவனே
அரவணைத்து எனையாள்வாய் ஐங்கரனே
ஆரெனக்கு வேறுதுணை ஏரம்பனே
பரபரக்கும் உலகில் நான் மூழ்காமல்
பக்குவமாய்க் காத்திடுவாய் விநாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனுக் கருளீந்தாய் கணபதியே நீயே
எழில் முருகன் துணையானாய் கஜமுகனே நீயே
சந்திரனும் சரணடைய இடமானாய் நீயே
சங்கரன் தேர் அச்சிறுத்த தலை மகனும் நீயே
மந்திரமாய் மறைகளுமாய் மிளிர்பவனும் நீயே
வாரணமாய் உருவெடுத்த முதல்வோனும் நீயே
செந்துவர் வாய் வல்லபைக்கு நாயகனும் நீயே
சீர்பொலியும் கும்பழா வளையுறைவாய் நீயே.

செவ்விளநீர் பூசைக்குத் தேடி அலை
திரு மிகுந்த பூசகர்க்கு அருள் புரிய
அவ்விடத்தே நின்றதொரு தென்னையிலே
பைங்காயைச் செங்காயாய் மாற்றினையே
கொவ்வைவாய்ச் சோழன் மகள் மாமுகத்தை
கவின் சொரியும் மதிமுகமாய் ஆக்கினையே
ஔவையவள் கயிலாயம் அடைவதற்கு
அருள் புரிந்த விநாயகனே அடைக்கலமே.

அன்னை அப்பன் உலகென்று வலம் வந்தாய்
அவர் அணைக்க அமரருமே மனமகிழ்ந்தார்
பன்னிருகை வேலவனும் ஆண்டியானான்
பழனியிலே அவன் நின்று அருள்புரிந்தான்
முன்னைவினை வேரறுக்கும் காரணனே
முழுவுலகும் உன்னடிமை ஆக்க வேண்டும்
எந்நாளும் நீயெனக்கு அருளவேண்டும்.
எவ்விடரும் அணுகாமல் காத்தல் வேண்டும்

சித்தமதில் குடிகொண்டு ஆளல்வேண்டும்
சீர்பெருக அடியார்கள் வாழல்வேண்டும்
பத்தியொடு நின்பூசை காணல்வேண்டும்
பரவசமாய் உள்மகிழ்ந்து ஆடல்வேண்டும்
உத்தமர்தம் உறவு கொண்டு உய்தல் வேண்டும்
உலகத்தினில் இன்னல்களும் ஒழியவேண்டும்
நித்தியம் நின் அருளாட்சி நிலவல்வேண்டும்
வித்தகனே விநாயகனே அருள்புரிவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியிலே மாதம் மூன்று மாரி வேண்டும்
புண்ணியங்கள் பூத்தழகு சிறக்க வேண்டும்
நேமியிலே நல்லாட்சி நிலவ வேண்டும்
நேர்மையுடன் மக்களுமே வாழல் வேண்டும்
தேமதுரத் தமிழ் மொழியும் ஒப்படைக்கவேண்டும்
செந்தமிழிற் புலவர் பலர் தோன்ற வேண்டும்
காமருவு கும்பழா வளை யுறையும்
கணபதியே நின்னருளைத் தந்திடுவாய்.

பிரணவ வடிவாகி விளங்குகின்ற விநாயகனே
அரிய நவசக்திகள் அளிப்பவனே போற்றி போற்றி
கூரிய கொம்பெழுத்தாணி கொண்டு மேருமேல்
வியாசர்சொல் பாரதத்ததை எழுதியவா போற்றி போற்றி
பாரிய பாசமதை விலக்கப் பாசாங்குசமும்
நேரிய பக்தியை விளக்கப் படிகமாலையும்
பூரணம் உள்ளே பொதி மோதகமும் கைகளில் ஏந்தி
அருள்புரி நவசக்தி விநாயகனே போற்றி போற்றி.


மதிரவி அக்கினிஎனும் மருவுமுக் கண்களால்
துதிசெய்யும் அடியார்தம் துயர்கடி சுடரே போற்றி
அதிஉயர் மெய்ஞ்ஞானம் அகத்தினிற் கொண்டோர்க்கு
விதியினை மாற்றிடும் வித்தைகள் அளிப்பாய் போற்றி
கதி இனி வேறில்லைக் கணபதியே நின்னருட்
பாதங்களைச் சிக்கெனப் பற்றி நின்றேன்
விதியினை மாற்றி என்னைச் சிவகதி அடையச் செய்வாய்.


வித்துவான் திரு. சே. ஆறும்பிள்ளை
**ஓய்வுபெற்ற ஆசிரியர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் 32 மூர்த்தங்கள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி கணபதி


த்விஜ கணபதி



சித்தி கணபதி


உச்சிஷ்ட கணபதி



ஷிப்ர கணபதி


விக்ன கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹேரம்ப கணபதி




லக்ஷ்மி கணபதி




துர்கா கணபதி



சங்கடஹர கணபதி




மகா கணபதி





விஜய கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிருத்த கணபதி


ஊர்த்துவ கணபதி



ஏகாட்சர கணபதி


வர கணபதி



திரயாஷ்ர கணபதி


க்ஷிப்ரபிரசாத கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹரித்திரா கணபதி




ஏகதந்த கணபதி




சிருஷ்டி கணபதி



உத்தண்ட கணபதி





ரணமோசன கணபதி





துண்டி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துவிமுக கணபதி


மும்முக கணபதி


சிங்க கணபதி


யோக கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நூலாசிரியரைப் பற்றி ..........

சீர் ஆறுப்பிள்ளை என்னும்
   சிறந்த என் நண்பா அன்புப்
பேராறு போன்ற தங்கள்
   பெருமதிப்புடைய பாக்கள்
நேராகப் படித்தேன் என்றன்
   நெஞ்சகம் குளிர்ந்தேன் வந்த
பாராரும் கீர்த்தி யெல்லாம்
   பராசக்தி கருணை அன்றோ!

தங்களின் பாக்கள் கம்பன்
   தமிழெனச் சுவைத்தேன் உள்ளம்
பொங்கிடும் வண்ணம் கண்டேன்
   புந்தியில் பூண்ட இன்பம்
தங்கிய பாடல் என்றன்
   சரித்திரப் பதிவாய்க் கொண்டேன்
ஐங்கரன் துணையால் நீங்கள்
   ஆதவன் போல வாழி!

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org